தினகனி

செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253


நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 71 | 4 Pages | 10.10.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 71 | 4 பக்கங்கள் | 10.10.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்**
**களவறிந்தார் நெஞ்சில் கரவு**

**விளக்கம்:**

**அளவறிந்து வாழ்கின்றவரின் நெஞ்சில் நிற்கும் அறம் போல் களவு செய்து பழகி அறிந்தவரின் நெஞ்சில் வஞ்சம் நிற்கும்.**

# 70வது தேசிய திரைப்பட விழா பொன்னியின் செல்வன் திரைப்படத்திற்கு விருது வழங்கினார் ஜனாதிபதி



ஜம்மு காஷ்மீர், அக்.10

ஜம்மு காஷ்மீர் தேர்தலில் ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாடு கட்சி மற்றும் காங்கிரஸ் கூட்டணி 49 இடங்களில் வெற்றி பெற்றுள்ளன. உமர் அப்துல்லா 2வது முறையாக ஜம்மு காஷ்மீர் முதல்வராக இருக்கிறார்.

ஜம்மு காஷ்மீர் தேர்தல் மூன்று பெண் வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

முன்னாள் மந்திரியான சகீனா மசூத் தேசிய மாநாடு கட்சி சார்பில் குல்காம் மாவட்டத்தில் உள்ள டி.ஹெச். போரா சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார். சகீனா மசூத் 36,623 வாக்குகள் பெற்றா'. 17,449 வாக்குகள் வித்தியாசத்தில் குல்சார் அகமது தார் என்பரை வீழ்த்தியுள்ளார்.

பா.ஜ.க. சார்பில் கிஷ்ட்வார் தொகுதியில் போட்டியிட்ட சகுன் பரிஹார், தேசிய மாநாடு கட்சியை சேர்ந்த சஜத் அகமது கிட்லூவை வீழ்த்தியுள்ளார். 29 வயதேயான ஷகுன் பரிஹார் 29,053 வாக்குகள் பெற்றிருந்தார். ஆனால் 521 வாக்குகள் வித்தியாசத்தில் மட்டுமே வெற்றி பெற்றார். சஜத் அகமது கிட்லூ 2002 மற்றும் 2008ல் வெற்றி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மற்றொரு தேசிய மாநாடு கட்சி வேட்பாளர் ஷமிம் ஃபிர்டோயஸ், பா.ஜ.க. வேட்பாளர் அசோக் குமார் பாட்ஐ 9538 ஆயிரம் வாக்களக் வித்தியாசத்தில் வீழ்த்தினார். இவர் ஸ்ரீநகரில் உள்ள ஹப்பாகடல் தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார். ஷமிம் 12437 வாக்குகள் பெற்றார். இந்த தொகுதியில் தேசிய மாநாடு கட்சி 1977ல் இருந்து ஆறு முறை வெற்றி பெற்றுள்ளது. ஷமிம் 2008 மற்றும் 2014 தேர்தலில் வெற்றி பெற்றிருந்தார்.

2014 தேர்தலில் இரண்டு பெண் வேட்பாளர்கள் வெற்றி பெற்றிருந்தனர். தற்போது எண்ணிக்கை 3 ஆக உயர்ந்துள்ளது.

# ஆசியான் மாநாட்டில் பங்கேற்க பிரதமர் மோடி லாவோஸ் பயணம்



புதுடெல்லி, அக். 10

தென்கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் இந்தியாஇணைந்த ஆசியான்இந்தியாஅமைப்பின் தற்போதைய தலைவராக லாவோஸ் உள்ளது. ஆசியான்இந்தியா அமைப்பின் 21வது உச்சி மாநாடு லாவோஸ் தலைநகர் வியன்டியனில் வருகிற 11ந்தேதி நடக்கிறது.

இதைப்போல கிழக்கு ஆசியா அமைப்பின் 19வது உச்சி மாநாடும் அங்கு நடைபெறுகிறது.

இந்த மாநாடுகளில் பங்கேற்க வருமாறு பிரதமர் மோடிக்கு அந்த நாட்டு பிரதமர் சோனக்சய் சிபன்டோன் அழைப்பு விடுத்தார். இதை ஏற்று பிரதமர் மோடி இந்த மாநாடுகளில் பங்கேற்க உள்ளார்.

இதற்காக 2 நாள் பயணமாக நாளை (வியாழக்கிழமை) அவர் லாவோஸ் புறப்பட்டு செல்கிறார். அங்கு அவர் மேற்படி 2 மாநாடுகளிலும் பங்கேற்கிறார். அத்துடன் இந்த மாநாடுகளுக்கு இடையே உறுப்பு நாடுகளின் தலைவர்களை தனித்தனியாக சந்தித்து இருதரப்பு உறவுகளையும் மேம்படுத்துவது குறித்து பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்துகிறார்.


பிரதமர் மோடியின் இந்த பயணம் குறித்து வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறியிருப்பதாவது:

இந்தியா தனது கிழக்கு சார்ந்த கொள்கையின் 10வது ஆண்டை இந்த ஆண்டு கொண்டாடுகிறது. கிழக்கு சார்ந்த கொள்கை மற்றும் இந்தோபசிபிக் மீதான நமது பார்வையின் மைய தூணாக ஆசியானுடனான உறவுகள் உள்ளது. நமது விரிவான மூலோபாய ஒத்துழைப்பு மூலம் இந்தியாஆசியான் உறவுகளை ஆசியான்இந்தியா உச்சி மாநாடு மறுஆய்வு செய்வதுடன், எதிர்கால திசையையும் வகுக்கும்.

கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் நம்பிக்கையின் சூழலைக் கட்டியெழுப்புவதற்கு கிழக்கு ஆசியா உச்சி மாநாடு பங்களிக்கும். இந்தியா உள்பட கிழக்கு ஆசியா உறுப்பு நாடுகளின் தலைவர்கள் தலைமையிலான இந்த மன்றமானது பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளில் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

இவ்வாறு வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

# வினேஷ் போகத் வெற்றி பெற எனது பெயர் உதவியது பிரிஜ் பூஷன் சிங்



புதுடெல்லி, அக். 10

கடந்த மாதம் காங்கிரஸில் இணைந்த ;மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத், ஜூலானா சட்டப்பேரவைத் தொகுதியில், தன்னை எதிர்த்து போட்டியிட்ட பாஜகவின் யோகேஷ் குமாரை தோற்கடித்து வெற்றியைப் பதிவு செய்தார். இதுகுறித்து உத்தரப் பிரதேசத்தின் கோண்டாவில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் பாஜக முன்னாள் எம்பியும், முன்னாள் இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவருமான பிரிஜ் பூஷண் சிங் பேசுகையில், "என் பெயரைப் பயன்படுத்தி வினேஷ் போகத் வெற்றி பெற்றுள்ளார்.

இதனால், நான் ஒரு பெரிய மனிதன் என்று அர்த்தம்..வினேஷ் போகத் எங்கு சென்றாலும் அழிவு அவரைப் பின்தொடர்கிறது. அது எதிர்காலத்திலும் நடக்கும். அவர் தானாக தேர்தலில் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால், காங்கிரஸ் தோல்வியடைந்துவிட்டது. இந்த மல்யுத்த வீரர்கள் ஹரியாணாவிற்கு கதாநாயகர்கள் அல்ல.

ஆனால், அவர்கள் வில்லன்கள். நாட்டில் காங்கிரசின் நிலை தொடர்ந்து மோசமடைந்து வருகிறது. ராகுல் காந்தியின் அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்து வருகின்றன. நாட்டு மக்கள் தங்களை நிராகரித்துள்ளனர் என்பதை இப்போது காங்கிரஸ் ஏற்க வேண்டும்" என்றார்.

# 46 ஆயிரத்து 931 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கருத்து

சென்னை, அக். 10

சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று நடந்த தமிழக அமைச்சரவை கூட்டம் தொடர்பாக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது சமூக வலைத்தளப் பதிவில் வெளியிட்ட கருத்து வருமாறு:

அமைச்சரவைக் கூட்டத்தில் மின்னணுப் பொருட்கள், பாதுகாப்பு, மருத்துவம், தோல் அல்லாத காலணிகள், புதுப்பிக்கத்தக்க ஆற்றல், மின் வாகனங்கள், தொலைத்தொடர்பு என பல்வேறு துறைகளில் பரவலாக 12 மாவட்டங்களில் 46 ஆயிரத்து 931 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய ரூ.38 ஆயிரத்து 698.80 கோடி மதிப்பிலான 14 முதலீட்டுத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் மாமன்ற முதல் கூட்டம்: அமைச்சர்கள் தொடங்கி வைத்தனர்



புதுக்கோட்டை, அக். 10

புதுக்கோட்டை மாநகராட்சி அலுவலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், மாமன்ற முதல் கூட்டத்தினை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் ஆகியோர், மாவட்ட கலெக்டர் மு.அருணா, தலைமையில் துவக்கி வைத்து, பல்வேறு திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, மேயர் திலகவதி செந்தில்க்கு வெள்ளி செங்கோலினை வழங்கினார்கள்.

பின்னர் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் தெரிவித்ததாவது

தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய பொதுமக்கள் நல்வாழ்வு வாழ்ந்திட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

அந்த வகையில், பொதுமக்களுக்கு தேவையான, குடிநீர் வசதி, மின்வசதி, சாலை வசதி, பேருந்து வசதி, சுகாதார வசதி உள்ளிட்டவைகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி இன்றைய தினம், புதுக்கோட்டை மாநகராட்சி மாமன்ற முதல் கூட்டத்தினை துவக்கி வைத்து, ரூ.145.55 கோடி மதிப்பீட்டில் புதிய பாதாள புதை வடிகால், புதை வடிகால் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், புதிய குடிநீர் திட்டம் மற்றும் புதிய பேருந்து நிலைய கட்டிடப் பணிகள் அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்டது. அந்த வகையில், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.18.90 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கட்டப் படவுள்ள புதிய பேருந்து நிலைய கட்டிட பணியினையும் மற்றும் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.101.34 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பாதாள சாக்கடை அமைக்கும் திட்டப் பணியினையும் மற்றும் ரூ.25.31 கோடி மதிப்பீட்டில் 24 ஓ 7 மணிநேரம் குடிநீர் வழங்கும் திட்டப் பணியினையும் அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்டது. இதில், பாதாள சாக்கடை அமைக்கும் திட்டமானது, 1, 2, 3, 4, 40, 41, 42 ஆகிய 7 வார்டுகளில் அமைக்கப்படுகிறது. மேலும் 8,101 வீட்டு இணைப்புகளுக்கும் இத்திட்டம் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 30,500 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயனடைவார்கள். மேலும், குடிநீர் வழங்கும் திட்டத்தின் மூலம் 24 மணி நேரமும் வாரத்தின் 7 நாட்களும் தங்கு தடையின்றி குடிநீர் வழங்கப்பட உள்ளது. இத்திட்டம் 38, 39, 40, 41, 42 ஆகிய 5 வார்டுகளில் அமைக்கப்படுகிறது. இதில் 3,850 குடிநீர் இணைப்புகள் புதிதாக வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 22,000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயனடைவார்கள். இப்பணிகள் அனைத்தையும் தரமாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர தொடர்புடைய அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இத்தகைய சிறப்புமிக்க திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

பின்னர் சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது

எனவே, பொதுமக்க ளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை நிறைவேற்றி வரும் தமிழக அரசின் திட்டங்களை தொடர்புடைய அரசு அலுவலர்கள் உரிய முறையில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் எனவும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், சட்டமன்ற உறுப்பினர்கள் வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை (கந்தர்வக் கோட்டை), முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தானமூர்த்தி, புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்செல்வன், புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையர் த.நாராயணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் இராசு.கவிதைப்பித்தன், மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் க.முகமது இப்ராஹிம், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) காளியப்பன், அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திரசேகரன், தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் பெ.தெய்வானை, அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# சென்னை சாம்சங் தொழிலாளர் போராட்டத்திற்கு திருப்பூரில் ஆதரவு ஆர்ப்பாட்டம்



திருப்பூர், அக். 11

சென்னை சாம்சங் தொழிலாளர் போராட்டத்திற்கு ஆதரவு ஆர்ப்பாட்டம் திருப்பூரில் நடைபெற்றது.

சென்னை சாம்சங் தொழிலாளர் போராட்டத்திற்கு ஆதரவாகவும், சங்கம் அமைக்கும் உரிமையை பறிக்காதே.. ஜனநாயக ரீதியான போராட்டங்களை ஒடுக்காதே.. உள்பட கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரியும் இன்று காலை 11 மணியளவில் திருப்பூர் கலெக்டர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம். தமிழ்நாடுவிவசாயிகள் சங்கம், அகிலஇந்திய விவசாய தொழிலாளர் சங்கம் திருப்பூர்மாவட்டக்குழுக்கள் சார்பில் நடைபெற்றது.

போராட்டத்திற்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் எஸ்.ஆர்.மதுசூதனன் தலைமை வகித்தார். அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட தலைவர் ஏ. சண்முகம் முன்னிலை வகித்தார்.

சிஐடியு மாநில குழு உறுப்பினர் ஜி.சம்பத், இந்திய ஜனநாயக வாலிபர்சங்கமாவட்ட செயலாளர் செ.மணிகண்டன், இந்திய மாணவர் சங்க மாவட்ட தலைவர் ஜி.எஸ்.கல்கிராஜ், அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்க மாவட்ட துணைத் தலைவர் பா.லட்சுமி, தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க தலைவர் அ. பாலதண்டபாணி, அ.இ.வி. தொ.ச மாவட்ட செயலாளர் அ. பஞ்சலிங்கம், த.வி.ச. மாவட்ட செயலாளர் ஆர்.குமார் ஆகியோர் கண்டன உரை ஆற்றினார்கள்.

# பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் தமிழ்நாடு அரசு பணியாளர் சங்கத்தின் விழுப்புரம் மாவட்ட பேரவை கூட்டத்தில் தீர்மானம்



விழுப்புரம், அக். 10

தமிழ்நாடு அரசு பணியாளர் சங்கத்தின் மாவட்ட பேரவை கூட்டம் விழுப்புரம் மாவட்ட சங்க அலுவலகத்தில் நடை பெற்றது, இதில்அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தையே நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, இதில் விழுப்புரம் மாவட்ட தலைவர் கவிஞர் ம.ரா. சிங்காரம் தலைமை தாங்கினார், மாவட்ட அமைப்பு செயலாளர் கோவிந்தசாமி அனைவரையும் வரவேற்றார், நிகழ்ச்சியில் 2024ம் ஆண்டிற்கானஉறுப்பினர்சந்தாவைநிறைவு செய்வது, பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்துவது, தற்போது வழங்கப்பட்டு வரும் மருத்துவப்படியை ரூ. 1000 ஆக உயர்த்த வேண்டும், தமிழ் நாட்டில் காலியாக உள்ள அனைத்து பணியிடங்களையும் உடனடியாக நிரப்ப வேண்டும், பல்நோக்கு மருத்துவ பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும், சத்துணவு, அங்கன்வாடி, பொது சுகாதாரத் துறையில் மஸ்தூர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கி அவர்களை பணி நிரந்தரம் செய்து அடிப்படை சம்பளம் வழங்க வேண்டும், நாட்டை தூய்மை செய்து பொது சுகாரத்தை பாத்துகாக்கும் தூய்மை பணியாளர்களுக்கு ஊதியத்தை உயர்த்தி வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டது, இதில் மாவட்ட செயலாளர் டேவிட் குணசீலன், மாவட்ட துணைத்தலைவர் பாலசுப்பிரமணியன், மத்திய செயற்குழு உறுப்பினர் சதீஷ், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் பூமாரி, இணைச்செயலாளர்கள் குணசேகரன், ராஜேந்திரன், மத்திய செயற்குழு உறுப்பினர்கள் சதீஷ், சரண்ராஜ், ஆதிமூலம், மருதமலை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள், இறுதியில் மாவட்ட பொருளாளர் குமரவேல் நன்றி கூறினார்.

தினகனி



# பாராளுமன்ற நிலைக்குழு கூட்டத்தில் பங்கேற்ற விஜய் வசந்த்

சென்னை, அக். 9

ரெயில்வே துறையின் நாடாளுமன்றநிலைக்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட விஜய் வசந்த் தனது தொகுதியில் கிடப்பில் உள்ள ரெயில்வே திட்டங்களை செயல்படுத்த கோரிக்கைவிடுத்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஃபேஸ் புக் பதிவில், "இரயில்வே துறைக்கான நாடாளுமன்றநிலைக்குழு அமைக்கப்பட்டு, அதன் முதல் கூட்டம் நேற்று நடைபெற்றது."

"இதில் நானும் ஒரு உறுப்பினராக தமிழகத்திற்கு,

குறிப்பாக குமரி மாவட்டத்தில் வெகு நாட்களாக கிடப்பில் கிடக்கும் இரயில்வே திட்டங்களை செயல்படுத்த முடியும் என நம்புகிறேன்," என்று குறிப்பிட்டுள்ளார்.

# சென்னையில் பா.ம.க.வினர் இலங்கை தூதரக முற்றுகை போராட்டம்

சென்னை, அக். 9

இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்படும்தமிழகமீனவர்களை பாதுகாக்க கோரியும், தற்போது இலங்கை சிறையில் வாடும் தமிழக மீனவர்களை மீட்க கோரியும், மீனவர்கள் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண கோரியும் சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தை இன்று முற்றுகையிட போவதாக பா.ம.க. அறிவித்திருந்தது.




அதன்படி வள்ளுவர் கோட்டம் அருகே பா.ம.க.வினர் திரண்டனர்.இந்தபோராட்டத்திற்கு முன்னாள் மத்திய மந்திரி ஏ.கே.மூர்த்தி, பா.ம.க. பொருளாளர்திலகபாமா ஆகியோர் தலைமை தாங்கினர்.

மேலும் சத்ரிய நாடார் இயக்க நிறுவனர் சந்திரன் ஜெயபால், தமிழ்நாடு நாடார் சங்க தலைவர் முத்து ரமேஷ் நாடார், நெல்லை தூத்துக்குடி நாடார் மகிமை பரிபாலன சங்க தலைவர் ஆனந்த ராஜ், தமிழ்நாடு வியாபாரிகள் சங்க பேரவை மாநில ஒருங்கிணைப்பாளர் அருண்குமார் உள்பட பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்களும் பங்கேற்றனர்.

மேலும் பாதிக்கப்பட்ட மீனவர் கிராமங்களான தூத்துக்குடி மாவட்டம் தருவைகுளம் உள்பட பல்வேறு கிராமங்களை சேர்ந்த மீனவர் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள். போராட்டத்தில் ஏ.கே.மூர்த்தி பேசும்போது, "கைது செய்யப்படும் மீனவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்படுகிறது.

இலங்கை சிறையில் மொட்டை அடித்து அவமானப் படுத்துகிறார்கள். கச்சத்தீவை தாரை வார்த்த தமிழக அரசுக்கு மீனவர்கள்படும்பாடு தெரியவில்லையா? இந்த பிரச்சனைக்கு தமிழக அரசு தீவிர அழுத்தம் கொடுத்து நிரந்தர தீர்வு காண முன்வர வேண்டும். தமிழக மீனவர்களும் இந்திய மீனவர்களேஎன்பதை கருத்தில் கொண்டு இந்த பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும்.

எல்லையில் இந்திய மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இரு நாட்டு சிறைகளிலும் வாடும் இலங்கை மற்றும் இந்திய மீனவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

உடமைகளை திருப்பிக் கொடுக்க வேண்டும். இரு நாட்டு பிரதிநிதிகள் குழு அமைத்து பேச்சுவார்த்தை மூலம் உடனடி தீர்வை எட்ட வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

அதைத் தொடர்ந்து இலங்கை தூதரகத்தை முற்றுகையிட புறப்பட்டார்கள் அவர்களை தடுத்து நிறுத்திய போலீசார் 5 பேரை மட்டும் மனு கொடுக்க அழைத்து சென்றனர்.

# சமூகநீதி குறித்து பேச தி.மு.க.வுக்கு தகுதி இல்லை அன்புமணி

சென்னை, அக். 9

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:



திருநெல்வேலி மாவட்டம் பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக பணியாற்றி வந்த பட்டியலினத்தைச் சேர்ந்த தி.மு.க. உறுப்பினரான பூங்கோதை அதே ஒன்றியத்தின் துணைத் தலைவராக பணியாற்றி வரும் தி.மு.க. ஒன்றியச் செயலாளர் மாரிவண்ண முத்து என்பவரால் தமக்கு இழைக்கப்படும் சாதி ரீதியான அடக்குமுறைகளையும்,

அவமதிப்புகளையும் தாங்கிக் கொள்ள முடியாமல் பதவி விலகியிருக்கிறார். இது அதிர்ச்சியளிக்கிறது.

ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும் பூங்கோதைக்கு முறையான நாற்காலி, மேசை கூட வழங்கப்படவில்லை என்றும், அதனால் ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாகவே அவர் பதவி விலகியிருப்பதாகவும் அவரது கணவர் சசிக்குமார் கூறியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் பட்டியலினத்தவருக்கு ஒதுக்கப்பட்ட பெரும்பான்மையான உள்ளாட்சிகளில் பட்டியலினத்தவருக்கு உண்மையான அதிகாரம் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு அதிகாரம் பெற்றுத் தர திராவிட மாடல் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உள்ளாட்சிகளில் சமூகநீதியை நிலை நிறுத்த முடியாத தி.மு.க.வுக்கு சமூகநீதி குறித்து பேசுவதற்கு எந்தத் தகுதியும் இல்லை. பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் மட்டுமின்றி தமிழ்நாடு முழுவதும் பட்டியலின மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதை தி.மு.க. அரசு உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# தமிழர்களுக்கு 80 சதவீத வேலை சட்டத்தை உடனே நிறைவேற்ற வேண்டும்: ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை, அக். 9

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:



காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரம் அருகில் செயல்படும் சாம்சங் தொழிற்சாலையில் பணியாற்றி வரும் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு, 8 மணி நேர வேலை, தொழிற்சங்க உரிமை உள்ளிட்ட 8 கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தம் மேற்கொண்டு வந்த நிலையில், தமிழக அமைச்சர்கள் முன்னிலையில் நேற்று நடைபெற்ற பேச்சுகளில் சாம்சங் நிறுவனத்திற்கும், தொழிலாளர்களில் ஒரு பிரிவினருக்கும் இடையே உடன்பாடு எட்டப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களில் இன்னொரு பிரிவினர் வேலை நிறுத்தத்தை தொடரப்போவதாக அறிவித்துள்ளனர்.

உண்மையில் சாம்சங் தொழிலாளர்கள் பிரச்சனைக்கு தீர்வு காணப்படவில்லை. மாறாக தொழிலாளர்களிடையே பிரிவினை ஏற்படுத்தப்பட்டு, சாம்சங் நிறுவனநிர்வாகம் தப்ப வைக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் நலன்களை அடகு வைத்துவிட்டு சாம்சங் நிறுவனத்தின் நலன்களை பாதுகாத்திருக்கிறது. இதன் மூலம் , தொழிலாளர்களுக்கு பெருந்துரோகம் செய்திருக்கிறது. இது கண்டிக்கத்தக்கது.

வேலை நிறுத்தத்தைத் தொடரும் சாம்சங் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படுவதற்கு அரசு துணை நிற்க வேண்டும். அத்துடன் தமிழ்நாட்டில் உள்ள தனியார் நிறுவனங்களில் 80 சதவீதம் வேலைவாய்ப்புகளை தமிழர்களுக்கு வழங்குவதற்கான சட்டத்தை உடனடியாக கொண்டு வந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# அதிமுக முன்னாள் அமைச்சர் தளவாய் சுந்தரம் பொறுப்புகளில் இருந்து நீக்கம்: எடப்பாடி பழனிசாமி

சென்னை, அக். 9

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் தளவாய் சுந்தரத்தை அமைப்பு செயலாளர் மற்றும் குமரி கிழக்கு மாவட்ட செயலாளர் ஆகிய

கட்சி பொறுப்புகளில் இருந்து தற்காலிகமாக நீக்கம் செய்யப்படுகிறார் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

கட்சியின் கொள்கை, குறிக்கோள், கோட்பாடுகளுக்கு எதிராக செயல்பட்டதால் நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவர்



மீதான புகார் குறித்து விசாரணை நடத்த வேண்டி உள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 1000 இடங்களில் 15ந்தேதி மருத்துவ முகாம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

சென்னை: அக்.9

சென்னை சைதாப்பேட்டை தொழிலாளர் காலனியில் இன்று நடைபெற்ற மருத்துவ முகாமை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.



பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தமிழக சுகாதாரத்துறை தயார் நிலையில் உள்ளது. தற்போது காய்ச்சல் பாதிப்பு அதிகமாக உள்ள இடங்களில் மருத்துவ முகாம்களைநடத்தி வருகிறோம். வருகிற 15ந்தேதி தமிழகம் முழுவதும் 1000 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட உள்ளது.

சென்னையில் 100 இடங்களிலும், மற்ற மாவட்டங்களில் 900 இடங்களிலும் இந்த முகாம்கள் நடத்தப்படுகிறது. முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்ட மக்களை தேடி மருத்துவ முகாம் திட்டம் 1 கோடி பேரை சென்றடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருந்தது.

ஆனால் 2 கோடி பேர் வரையில் பயனடைந்துள்ளனர். இதுவரை 1 கோடியே 96 லட்சத்து 77,577 பேர்பயன் அடைந்திருக்கிறார்கள். இதன் மூலம் ஐ.நா.சபையின் பாராட்டையும் பெற்றுள்ளோம். டெங்கு காய்ச்சலை தடுப்பதற்கு பொதுமக்களும் முழுமையாக ஒத்துழைப்பை அளிக்க வேண்டும்.

2012ம் ஆண்டு 66 பேரும், 2013ல் 65 பேரும் டெங்கு காய்ச்சலால் உயிரிழந்துள்ள நிலையில் கடந்த 3 ஆண்டுகளில் டெங்கு உயிரிழப்புகள் குறைந்து உள்ளன. இந்த ஆண்டு இதுவரையில் 7 பேர் மட்டுமே பலியாகி இருக்கிறார்கள்.

தங்களது வீடுகளின் சுற்றுப்புறங்களில் மழைநீர் தேங்காமல் மக்கள் பார்த்துக்கொண்டாலே கொசு உற்பத்தி தடுக்கப்பட்டு விடும். எனவே பொதுமக்கள் இதில் கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தீபாவளிக்கு ஆன்லைனில் பட்டாசு வாங்குகிறீர்களா? உஷாராக இருங்க...

சென்னை, அக். 9

தீபாவளி பண்டிகைக்கு இன்னும் 3 வாரங்களே இருக்கும் நிலையில், பட்டாசுகளை வாங்குவதற்கு பொதுமக்கள் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.



அனைத்து பொருட்களுமே தற்போது ஆன்லைனில் கிடைக்கும் நிலையில் பட்டாசுகளையும் மக்கள் இருந்த இடத்தில் இருந்தே வாங்குவதற்கு முனைப்பு காட்டி வருகிறார்கள்.

அதற்கேற்ப பல்வேறு பட்டாசு விற்பனை நிறுவனங்களும் ஆன்லைனில் ஆர்டர்களை பெற்று விற்பனையில் ஈடுபடத் தொடங்கி உள்ளன.

அதில் குறிப்பிட்ட சதவீதம் தள்ளுபடியும் அறிவிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் குறைந்த வகையில் பட்டாசுகளை வாங்குவதற்கு போட்டி போட்டு ஆன்லைனில் பணத்தை செலுத்தி விட்டு பட்டாசு பார்சல்களுக்காக காத்திருக்கிறார்கள்.

இதனை பயன்படுத்தி மோசடி பேர்வழிகள் ஆன்லைனில் ஏமாற்றி பணம் பறிக்கும் நோக்கத்தில் வலை விரித்து காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

போலியான பெயர்களில் பட்டாசு விற்பனை நிறுவனங்கள் மற்றும் இணையதள முகவரிகளை தொடங்கி ஆன்லைனில் பணத்தை வாங்கிவிட்டு பட்டாசுகளை அனுப்பாமல் இந்த கும்பல் மோசடியில் ஈடுபட்டு வருகிறது.

இதனால் ஆன்லைனில் பட்டாசு வாங்குபவர்கள் மிகவும் உஷாராக இருக்க வேண்டும் என்று பட்டாசு விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆன்லைனில் சில்லரை விலையில் பட்டாசுகளை விற்பனை செய்வதற்கு ஏற்கனவே கோர்ட்டு தடை விதித்துள்ள நிலையில் அதையெல்லாம் மீறியே ஆன்லைனில் பட்டாசு விற்பனை அங்கீகரிக்கப்படாத நிறுவனங்கள் மூலமாக நடைபெற்று வருகிறது.

இதனை பயன்படுத்தித் தான் ஆன்லைனில் மோசடி கும்பல் ஏமாற்றுவதற்கு திட்டம் போட்டு செயல்பட்டு வருகிறது.

எனவே பொதுமக்கள் ஆன்லைனில் பட்டாசுகளை ஆர்டர் செய்து வாங்கும் போது மிகுந்த கவனமுடன் இருக்க வேண்டும் என்றும், இல்லையென்றால் பணத்தை இழந்து தவிக்கும் நிலை ஏற்படும் என்றும் பட்டாசு வியாபாரிகள் எச்சரித்துள்ளனர்.

# கையில் ரத்தம் சொட்ட சொட்ட பட்டாக்கத்தி, காயங்களுடன் ஆஸ்பத்திரிக்கு வந்த வாலிபர்

காரைக்குடி, அக். 9

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகேயுள்ள முத்துப்பட்டினம் பகுதியைச் சேர்ந்தவர் பால்ராஜ். இவருக்கு சிவபாண்டியன் மற் றும் பிரகதீஸ்வரன் ஆகிய இரண்டு மகன்கள்உள்ளனர்.இருவருக்கும்திருமணமாகிதனிக்குடித்தனம் வசித்து வருகின்றனர்.

இதற்கிடையே சிவபாண்டியனுக்கும் பிரகதீஸ்வரனுக்கும் இடையே பூர்வீகச் சொத்துக்களை பிரிப்பதில் தகராறு இருந்து வந்தது. இந்தநிலையில் நேற்று இரவு மீண்டும் அவர்களுக்குள் தகராறு உருவானது. இதில் ஆத்திரம் அடைந்த பிரகதீஸ்வரன், அண்ணன் சிவபாண்டியனை தனது இரு நண்பர்களுடன் சேர்ந்து பட்டாக்கத்தியால் தலை, கழுத்து, கை உள்ளிட்ட இடங்களில் சரமாரியாக வெட்டினார். பலத்த காயம் அடைந்த சிவபாண்டியன், அந்த சூழ்நிலையிலும் தம்பியின் கையில் இருந்த பட்டாக்கத்தியை பறித்தார். பின்னர் பிரகதீஸ்வரன் மற்றும் அவரது நண்பர்கள் அங்கிருந்து சென்றுவிட்டனர்.

இதையடுத்து பலத்த காயங்களுடன் சிவபாண்டியன் நேராக காரைக்குடியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சென்றார். கையில் ரத்தம் சொட்ட சொட்ட பட்டாக்கத்தி, தலை, கழுத்தில் வெட்டுக் காயங்களுடன் வந்தவரை பார்த்த ஆஸ்பத்திரியில் பணியில் இருந்த செவிலியர்கள், காவலாளி ஆகியோர் பதறியடித்துக்கொண்டு ஓடினர்.

பின்னர் இதுபற்றி தனி அறையில் இருந்த டாக்டர்களுக்கும், போலீசாருக்கும் தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் காரைக்குடி வடக்கு போலீசார் அங்கு விரைந்து வந்தனர். அவர் கள் சிவபாண்டியனிடம் விசாரித்தபோது சொத்து பிரச்சினை காரணமாக தனது தம்பி தன்னை வெட் டியதாகவும் அவரிடம் இருந்து பட்டாக்கத்திய பறித்து கொண்டு சிகிச்சைக்கு மருத்துவமனைக்கு வந்ததாகவும் தெரிவித்தார்

# விஜய்யின் புதிய கட்சியால் அ.தி.மு.க.வுக்கு பாதிப்பு இல்லை: செல்லூர் ராஜீ தகவல்

மதுரை, அக். 9

மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் மதுரைதிண்டுக்கல்ரோடு, நேதாஜி ரோடு பகுதியில் நடைபெற்ற சொத்து வரி உயர்வுக்கு எதிரான மனித சங்கிலி போராட்டத்திற்கு மாநகர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் ராஜூ தலைமை தாங்கினார். அப்போது அவர் பேசியதாவது:



தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்து தொடர்ந்து மக்களின் மீது வரிச் சுமைகளை ஏற்றி வருகிறது. தற்போது ஆண்டு தோறும் 6 சதவீத சொத்து வரி உயர்வினை மக்கள் மத்தியில் திணித்துள்ளது. இது மட்டுமல்ல மின்கட்டணம் உள்ளிட்ட அனைத்து விலைவாசிகளும் அதிகரித்துவிட்டன. ஆனால் முதலமைச்சர் இதுபற்றி எதுவும் கவலைப்படாமல் தனது தந்தை பெயரில் பூங்கா திறப்பதை சாதனையாக நினைத்துக் கொண்டிருக்கிறார். மகன் உதயநிதியை துணை முதலமைச்சராக்கி அழகு பார்க்கிறார். ஆனால் தி.மு.க. ஆட்சிக்கு வர வாக்களித்த மக்கள் மீது வரிக்கு மேல் வரியை போட்டு வருகிறார். வரிக் குதிரையின் உடம்பில் உள்ள வரியை விட தமிழக மக்கள் மீது சுமத்தப்பட்ட வரியே அதிகமாக உள்ளது.

தி.மு.க. ஆட்சியில் எங்கு பார்த்தாலும் போதை பொருள் நடமாட்டம் அதிகரித்துவிட்டன. இதனை தான் கவர்னர் ஆர்.என்.ரவி தெளிவாக கூறியிருக்கிறார். முன்பெல்லாம் பள்ளி, கல்லூரிகளுக்கு முன்பு இனிப்பு மிட்டாய்கள் தான் விற்கப்படும். ஆனால் தற்போது, போதை மாத்திரைகள் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் பிள்ளைகளை விடுதியில் தங்க வைத்து படிக்க வைக்க கூட பெற்றோர்கள் அஞ்சுகிற சூழ்நிலையை தி.மு.க. அரசு உருவாக்கி உள்ளது.

அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் மக்களால் மறக்கப்பட்டவர். அவரைப் பற்றி இப்போது பேசுவது பொருத்தம் அல்ல. நடிகர் விஜய் இப்போதுதான் புதிய கட்சியை தொடங்கியுள்ளார். மாநாட்டின் போது தான் அவரது கொள்கை கோட்பாடு பற்றி தெரியும். அப்போது தான் அவரது கட்சியை ஏற்றுக்கொள்வதா, வேண்டாமா என்பதை மக்கள் முடிவு செய்வார்கள். விஜய்யின் புதிய கட்சியால் அ.தி.மு.க.வுக்கு எந்த பாதிப்பும் இல்லை.

சென்னை மெரினாவில் நடைபெற்ற விமான சாகச நிகழ்ச்சியின் போது 5 உயிர்கள் பறிபோய் உள்ளது. இதை மாநில அரசு உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் தடுத்திருக்க முடியும். ஒவ்வொரு இடங்களிலும் உரிய பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டு எத்தனை பேர் அங்கே அனுமதிக்கப்பட வேண்டுமோ அத்தனை பேரை மட்டுமே அனுமதித்திருந்தால் இந்த உயிரிழப்பு ஏற்பட்டு இருக்காது. ஆனால் இதுபோன்று கூட்டத்தை கட்டுப்படுத்த தேவையான எந்த நடவடிக்கையும் மாநில அரசு எடுக்கவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

# விழுப்புரம் மாவட்டத்தில் திமுகவிற்கு எதிராக அதிமுக நடத்திய மாபெரும் மனித சங்கிலி போராட்டம்




விழுப்புரம், அக். 10

விழுப்புரம் மாவட்டம் அறங்கண்டநல்லூர் பேரூராட்சியில் அதிமுக சார்பில் 40 மாத காலமாக தமிழக மக்கள் பல்வேறு இன்னல்களைவருவதற்கு காரணமான திமுக அரசை கண்டித்தும் மக்கள் நலன் கருதி உயர்த்தப்பட்ட சொத்து வரியை உடனடியாக திரும்பப் பெற வலியுறுத்தியும்

அதிமுக முகையூர் ஒன்றிய செயலாளர்கள் பழனிச்சாமி, தனபால், இளங்கோவன், ஆகியோர் தலைமையில் மாபெரும் மனித சங்கிலி போராட்டம் நடைபெற்றது.

இதில் மின்கட்டணம் உயர்வு, சொத்து வரி, குடிநீர் வரி,அத்தியாவசியப் பொருட்கள் உயர்வு குறித்து திமுகவிற்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன. உடன் மாவட்ட பொருளாளர் ராமச்சந்திரன், நகர செயலாளர் ராஜ்குமார், குரு, மாவட்ட மாணவரணி தலைவர் பார்த்திபன், முன்னாள் வார்டு கவுன்சிலர் ஆறுமுகம் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சாம்சங் ஊழியர்களுக்கு லிப்ட் கொடுத்து டிரைவர் செய்த அதிர்ச்சி செயல்: வெளியான சிசிடிவி காட்சி




காஞ்சிபுரம், அக் 10

காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரம் அடுத்த எச்சூர் பகுதியில் சாம்சங் தொழிலாளர்கள் தொடர்ந்து பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 30 நாட்களாக போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் போராட்டத்திற்கு வரும் ஊழியர்கள் சுங்குவார்சத்திரம் அருகே நடந்து வந்து கொண்டிருந்த பொழுது அவ்வழியாக வந்த மினி வேன் டிரைவர் நான் அந்த வழியாகதான் செல்கிறேன் நீங்கள் வருகிறீர்களா என்று கேட்டு வலுக்கட்டாயமாக 13 பேரை ஏற்றியதாக கூறப்படுகிறது

இந்த நிலையில் அந்த மினி வேன் வாகனம் சாம்சங் தொழிற்சாலை அருகே வரும் பொழுது அதன் டிரைவர் வாகனத்தை மிகவும் வேகமாக தாறுமாறாக இயக்கியுள்ளார். அப்பொழுது சாம்சங் நிறுவனத்தின் தடுப்பு சுவரில் மோதி மினி வேன் வாகனம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த சம்பவத்தில் காயமடைந்த 13 பேர் ஸ்ரீபெரும்புதூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஒரு சிலர் மேல் சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு அங்கு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இந்நிலையில் இந்த சம்பவம் தொடர்பான சிசிடிவி காட்சிகள் தற்போது வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. விபத்து குறித்து சுங்குவார்சத்திரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சாரா நலவாரியங்களின் கீழ் பதிவு செய்வதற்காக வாரம்தோறும் பதிவு முகாம்




கள்ளக்குறிச்சி, அக். 10

கள்ளக்குறிச்சி மாவட்டம் தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரியம் கட்டுமானத் தொழில்கள் புரியும் வெளி மாநில / புலம்பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர்கள் (Interstate Migrant Workers) மற்றும் இணையம் சார்ந்த தொழில்கள் புரியும் கிக் (Online based GIG Workers) அமைப்புசாரா நலவாரியங்களின் கீழ் பதிவு செய்வதற்காக வாரம்தோறும் காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை அலுவலகத்திலேயே பதிவு முகாம் (Camp) அமைக்கப்பட்டுள்ளது

தமிழ்நாடு அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள்தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம்க ட்டுமானத் தொழில்கள் புரியும் வெளிமாநில / புலம்பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர்கள் (Interstate Migrant Workers) மற்றும் இணையம் சார்ந்த தொழில்கள் புரியும் கிக் தொழிலாளர்களை (Online based GIG Workers) தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நலவாரியங்களின் கீழ் இணையதளத்தின் மூலம் பதிவு செய்து புதிய உறுப்பினர்களாக சேர்ப்பதற்காக, வாரம் தோறும் காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை அலுவலகத்திலேயே கட்டணமின்றி பதிவு முகாம் (Camp) அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள அமைப்புசாரா தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் பணி நிலைமைகளை ஒழுங்குபடுத்தவும், அவர்களுக்கு சமூக பாதுகாப்பு அளிக்கவும், தமிழ்நாடு அரசு 1982ம் ஆண்டில் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பு மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தினை இயற்றியது. அதன் அடிப்படையில், தமிழ்நாடு கட்டுமானம், உடலுழைப்பு உள்ளிட்ட 18 அமைப்புசரா தொழிலாளர் நலவாரியங்கள் உருவாக்கப்பட்டு தற்போது இயங்கி வருகிறது. 18 வயது முதல் 60 வயதுக்குட்பட்ட அமைப்புசாரா தொழிலாளர்கள் மேற்படி உரிய நலவாரியங்களில் இணையதளத்தின் மூலம் பதிவு மேற்கொள்ளலாம். பதிவு பெற்ற பின்னர் கல்வி, திருமணம், மகப்பேறு, கண்கண்ணாடி, ஓய்வூதியம், வீட்டு வசதி திட்டம், இயற்கை மரணம், விபத்து மரணம் மற்றும் பணியிடத்து விபத்து மரணம்போன்றநிதியுதவிகள் கோரி இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம். பெறப்பட்ட தகுதியான விண்ணப்பங்கள் ஒப்பளிக்கப்பட்டு நிதியுதவி தொகைகள்தொழிலாளர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக வழங்கப்பட்டு வருகிறது.

★ தற்போது, கட்டுமானத் தொழில்கள் புரியும் வெளிமாநில புலம்பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர்கள் (Interstate Migrant Workers) மற்றும் இணையம் சார்ந்த தொழில்கள் புரியும் கிக் தொழிலாளர்களை (Online based GIG workers) தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் உடலுழைப்பு தொழிலாளர்கள் நலவாரியத்தின் கீழ் இணையதளத்தின் மூலம் பதிவு செய்து புதிய உறுப்பினர்களாக சேர்க்கும் பொருட்டு, வாரம்தோறும் காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை அலுவலகத்திலேயே பதிவு முகாம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே 18 வயது முதல் 60 வயதுக்குட்பட்ட தகுதியுள்ள வெளிமாநில புலம்பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் இணையம் சார்ந்த தொழில்கள் புரியும் கிக் தொழிலாளர்கள் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள இப்பதிவு முகாமினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முகாமிற்கும் வரும் போது, தொழிலாளி மற்றும் குடும்ப★ உறுப்பினர்கள் ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வங்கி புத்தகம், பாஸ்போர்ட் சைஸ் போட்டோ, ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட தொலைபேசி எண் உள்ளிட்ட அனைத்து அசல் ஆவணங்களுடன், எண்.23/A, தாய் இல்லம், அண்ணாநகர் மெயின் ரோடு, கள்ளக்குறிச்சி 606202 என்ற முகவரியில் உள்ள கள்ளக்குறிச்சி, தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகபாதுகாப்புதிட்டம்) அலுவலகத்தில் நேரில் சமர்ப்பித்து பதிவேற்றம் செய்து புதிய உறுப்பினராக சேர்ந்து கொள்ளுமாறு கள்ளக்குறிச்சி, தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகபாதுகாப்புதிட்டம்) அவர்கள் தெரிவித்துள்ளார்.

# ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு: 27 பேரின் நீதிமன்ற காவல் நீட்டிப்பு



சென்னை, அக். 10


பகுஜன் சமாஜ் கட்சி தமிழ்நாடு மாநில தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் கடந்த ஜூலை மாதம் கொலை செய்யப்பட்டார். இந்த கொலை சம்பவம் தமிழ்நாட்டையே உலுக்கிய நிலையில், இந்த வழக்கு தொடர்பாக காவல்நிலையத்தில் சரணடைந்தவர்களிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டதில் முன்விரோதம் மற்றும் பகை காரணமாக இந்த கொலை சம்பவம் நிகழ்ந்தது தெரியவந்தது.

இந்த கொலைவழக்கில் 27 நபர்கள் கைது செய்யப்பட்டு குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர். மேலும் இந்த கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட 2 பேர் என்கவுன்டர் செய்யப்பட்டனர். இதனிடையே ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் 5 ஆயிரம் பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகை எழும்பூர் நீதிமன்றத்தில் செம்பியம் போலீசாரால் சமீபத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கொலைவழக்கில்தலைமறைவாக உள்ள ரவுடி சம்போ செந்தில் மற்றும் மொட்டை கிருஷ்ணன் உள்ளிட்ட 30 பேர்மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. குற்றப்பத்திரிக்கையில் ஏ1 குற்றவாளியாக பிரபல ரவுடி நாகேந்திரன் மற்றும் ஏ2 குற்றவாளியாக தலைமறைவாகஇருக்கும்சம்போ செந்தில் ஆகியோரின் பெயர்கள் இடம் பெற்றிருந்தன. இதனிடையே குற்றப்பத்திரிகையில் ஏ2 ஆக சேர்க்கப்பட்டுள்ள சம்போ செந்திலை கைது செய்ய தனிப்படை போலீசார் துபாய் செல்கின்றனர்.

இந்நிலையில் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் தொடர்புடைய 27 பேரின் நீதிமன்ற காவலை நீட்டித்து, எழும்பூர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வழக்கில் கைதான 27 பேரின் நீதிமன்ற காவல் நிறைவடைந்தநிலையில், வீடியோ கான்பரன்சிங் மூலம் இன்று ஆஜர்படுத்தப்பட்டனர். இதனையடுத்து வரும் 22ம் தேதி வரை நீதிமன்ற காவலை நீட்டித்து எழும்பூர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

# திருப்பூர் வெடி விபத்து: உயிரிழப்பு 3ஆக உயர்வு



திருப்பூர் , அக். 10

திருப்பூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பெருமாநல்லூர் சாலையில் உள்ள பாண்டியன் நகர், சத்யா காலனி பகுதியைச் சேர்ந்தவர் கார்த்தி. இவருக்கு அப்பகுதியில் சொந்தமான வீடு உள்ளது. இந்நிலையில், கார்த்தி அங்குள்ள கோவில் விசேஷங்களுக்குப் பயன்படுத்தப்படும் பட்டாசு நாட்டு வெடிகளை தயாரித்து கொடுத்து வந்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த சூழலில், இன்று மதியம் திடீரென அதிக சப்தத்துடன் வெடிச்சத்தமானது கேட்டுள்ளது. இதில், கார்த்தி என்பவரது வீடு முழுவதுமாக தரைமட்டமாக சேதமடைந்துள்ளது. இந்த சம்பவத்தில் அருகில் இருந்தவர்கள் படுகாயம் அடைந்தனர். அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதனிடையே இந்த வெடி விபத்தில் சிக்கி ஒருவர் உடல் சிதறி உயிரிழந்ததாக தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் நாட்டு வெடிகுண்டு வெடித்து விபத்தில் சிக்கி மூன்று பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. 9 மாத குழந்தை, பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில், சிகிச்சை பெற்று வந்த குமார் என்பவரும் உயிரிழந்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த நாட்டு வெடிகுண்டு வெடித்ததால் கார்த்தி என்பவரது வீடு சேதம் அடைந்தது டன், அருகில் இருந்த 10க்கும் மேற்பட்ட வீடுகள் முழுவதும் சேதம் அடைந்துள்ளன. சம்பவ இடத்தில் காவல்துறையினர் ஆய்வு நடத்தியநிலையில் கார்த்தி என்பவருக்கு சொந்தமான வீட்டில் இருந்து ஏராளமானநாட்டு வெடிகுண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. விபத்து நடந்த இடத்தில் போலீசார் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

# பாஜகவுடன் கூட்டணியா? எது வேண்டுமானாலும் நடக்கலாம்.. திண்டுக்கல் சீனிவாசன் தகவல்



மதுரை, அக். 10

மதுரையில் அதிமுக சார்பில் நேற்று முன்தினம் இரவு ஆலோசனை கூட்டம் நடந்தது. கூட்டத்தில் பேசிய முன்னாள் அமைச்சர்திண்டுக்கல்சீனிவாசன், "அண்ணாவால் வளர்ந்த கட்சி, எம்.ஜி.ஆரால் வளர்க்கப்பட்ட கட்சி இன்று உதயநிதியிடம் சென்றுள்ளது. கலர் கலராக வண்ணம் தீட்டிய ரெயில்களை இயக்கி மக்களிடம் பணம் சுரண்டும் அரசாக மத்திய அரசு உள்ளது. அதைக் கண்டிக்க வேண்டிய மாநில அரசு வேடிக்கை பார்க்கிறது. வரும் சட்டசபை தேர்தலில் 200 இடங்களுக்கும் மேலாக அ.தி.மு.க., வெற்றி பெறும். எடப்பாடி பழனிசாமி முதல்அமைச்சராவதை எந்தகொம்பனாலும்தடுக்கமுடியாது" என்று அவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் பாஜகவுடன்வரும்சட்டசபை தேர்தலில் கூட்டணி அமைக்கப்படுமா என்ற செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் பதிலளிக்கையில், "அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை; நிரந்தர நண்பனும் இல்லை. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்கள் உள்ளன. அப்போது எது வேண்டுமானாலும் நடக்கலாம்" என்று அவர் கூறினார்.




திருநெல்வேலி மாவட்டம் நடுவுக்கு குறிச்சி ரோட்டரி கிளப் திருநெல்வேலி வெஸ்ட் சார்பில் இலவச இருதய பரிசோதனை முகாம் தலைவர் ராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக முன்னாள் ஆளுநர் முத்தையா பிள்ளை கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் மேலும் காவேரி மருத்துவமனை மருத்துவ குழு பொதுமக்களுக்கு ரத்தப் பரிசோதனை, உடல் எடை, எக்கோ, மற்றும் இசிஜி செய்திருந்தனர் மொத்த பயனாளிகள் 72 பேர். நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர்களாக நல்லூர் வட்டம் திருநெல்வேலி சார்பாக முத்துப்பட்டன் நாராயணகுமார், பிரபு, சங்கர், மகாராஜன், ரெட்டையன் இவர்களுடன் பேராசிரியர் முனைவர் பெலிக்ஸ் பிரான்சி கலந்து கொண்டுள்ளார்

# சுப்ரீம் கோர்ட்டு உணவகத்தில் நவராத்திரியையொட்டி சைவ உணவு வழங்குவதா? கி.வீரமணி கண்டனம்



சென்னை, அக். 10

திராவிடர் கழக தலைமை செயற்குழு கூட்டம் தலைவர் கி.வீரமணி தலைமையில் பெரியார் திடலில் நடந்தது. இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு,

தமிழின சமுதாயத்தில் மிகப்பெரிய எழுச்சியையும், மாற்றத்தையும், வெற்றியையும் உருவாக்கிய சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு விழாவை நவம்பர் 26ந்தேதி அன்று ஈரோட்டில் சிறப்புடன் நடத்துவது. தமிழின மீனவர்களின் மீதான துயரம் தொடராமல் இருக்க, உறுதியான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

இப்பிரச்சினைக்கு சட்டரீதியான முடிவினை ஏற்படுத்திட, அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்றை நடத்தி, உரிய முடிவினை மேற்கொள்ள வேண்டும் என்றும் இக்கூட்டம் ஒருமனதாக தமிழ்நாடு அரசைக் கேட்டுக்கொள்கிறது. 'புதிய கல்விக்கொள்கையின் அங்கமான பி.எம்.ஸ்ரீ பள்ளிகள் திட்டத்தை ஏற்றுக் கொண்டால்தான் தமிழ்நாட்டுக்கான கல்வி நிதியை விடுவிக்க முடியும்' எனத் தெரிவித்து தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய நிதியைக் கொடுக்க மறுத்து வரும் பா.ஜ.க அரசுக்கு கண்டனம். 'விஸ்வகர்மா யோஜனா' என்ற பெயரில் ஒன்றிய அரசு திணிக்கும் குலக்கல்வித் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு நிராகரித்திருப்பது வரவேற்கத்தக்கது.

இத்திட்டத்தை கைவிட வேண்டும் என்று ஒன்றிய அரசை இச்செயற்குழு வலியுறுத்துகிறது. ஒன்றியத்தில் ஆளும் மைனாரிட்டி பா.ஜ.க. அரசின் பி.எம்.ஸ்ரீ திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள பள்ளிகளில், வரும் அக்டோபர் 7 முதல் 11 வரை பல்வேறு போட்டிகளை நடத்த ஒன்றிய அரசு சுற்றறிக்கை விடுத்து உள்ளது. அதில், விவாதப் போட்டிக்கு அளிக்கப்பட்டு உள்ள "ஒரு தேசம் ஒரு தேர்தல், விக்சித் பாரத்" ஆகிய தலைப்புகள் சர்ச்சைக்குரியவை. மாணவர்களின் பிஞ்சுஉள்ளத்தில்பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். கொள்கைகளை பரவலாக்க முன்னெடுக்கும் இந்த முயற்சியை எந்த விதத்திலும் அனுமதிக்க முடியாது.

மக்கள் செலுத்தும் வரிப் பணத்தை பள்ளிகளின் மேம்பாட்டுக்கு தர மறுக்கும் இதே பாஜக, தன்னுடைய ஆபத்தான கொள்கைத் திட்டங்களை கொண்டு செல்ல பள்ளிகளை பயன்படுத்துவது மாணவர் விரோதப் போக்காகும், வன்மையான கண்டனத்திற்குரியதாகும். இந்த முடிவை ஒன்றிய அரசு உடனே திரும்பப் பெற வேண்டும் என ஒன்றிய அரசைதிராவிடர்கழக தலைமைச் செயற்குழு வலியுறுத்துகிறது. 'நவராத்திரி விழா' என்கிற பெயரில் ஒன்பது நாட்களுக்கு உச்சநீதிமன்ற உணவகத்தில் சைவ உணவு மட்டுமே வழங்கப்படும் என்றும், அது மட்டுமின்றி பூண்டு, வெங்காயம் இல்லாத உணவு மட்டுமே வழங்கப்படும் என்றும் உச்சநீதிமன்ற உணவகத்தின் நிர்வாகத்திற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.இது தவறான முன்னுதாரணமாகி விடும் என சுப்ரீம் கோர்ட்டில் வழக்காடும் வழக்கறிஞர்களின் கருத்துக்கு உரிய மதிப்பு அளித்து, உணவு கட்டுப்பாடு விதிக்கும் செயலை தடுத்து நிறுத்துமாறு சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதிக்கு இச்செயற்குழு வேண்டுகோள் விடுக்கிறது என்பது உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. என தெரிவித்துள்ளார் .

# கொடைக்கானல் மலைப்பாதையில் உருண்டு விழுந்த பாறைகள் அகற்றம்: போக்குவரத்து சீரானது



கொடைக்கானல், அக்.10

கொடைக்கானலில் கடந்த சில நாட்களாகவே மழை வெளுத்து வாங்கி வருகிறது. இந்த நிலையில் நேற்று காலை 11 மணிக்கு சாரல் மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை, மாலை வரை பெய்து கொண்டே இருந்தது. இதன் எதிரொலியாக பகல் நேரத்தில் மலைப்பாதை மேகமூட்டமாக காட்சி அளித்தது. இதனால் பகல் நேரத்திலேயே வாகனங்கள் முகப்பு விளக்குகளை ஒளிரவிட்டபடி சென்றன. வாகன ஓட்டிகள் மிகவும் சிரமப்பட்டனர்.

இதற்கிடையே நேற்று முன்தினம் மாலையில் பெய்த கனமழைக்கு பெருமாள்மலை வழியாக அடுக்கம்கும்பக்கரை செல்லும் மலைப் பாதையில் பாறைகள் உருண்டு விழுந்தன. மலைப்பாதையில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் போக்குவரத்துதுண்டிக்கப்பட்டது.

இதுகுறித்து தகவலறிந்த நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள், பணியாளர்கள்விரைந்து வந்து மலைப்பாதையில் விழுந்த பாறைகள், கற்கள், மண்குவியல்களை அகற்றினர். மேலும் மண் சரிவு ஏற்பட்ட இடத்தில் தற்காலிகமாக சீரமைக்கும் பணி நடந்தது. இதையடுத்து நேற்று காலை முதல் அடுக்கம் மலைப்பாதையில் போக்குவரத்து தொடங்கியது.

இதுகுறித்து பொதுமக்கள்கூறுகையில், மலைப் பாதையில் மழைக்காலத்தில் அடிக்கடி மண் சரிவு ஏற்படுகிறது. இதனால் மோட்டார் சைக்கிள் மற்றும் கார், வேன் உள்ளிட்ட இலகுரக வாகனங்கள் செல்ல முடியாத நிலை உள்ளது. எனவே அடுக்கம் மலைப்பாதையை விரைவில் முழுமையாக சீரமைத்து போக்குவரத்து தொடங்க வேண்டும். தேனி மற்றும் கேரள மாநிலத்தில் இருந்து வரும் வாகனங்கள் அந்த சாலையை பயன்படுத்தினால், கொடைக்கானல் வத்தலக்குண்டு மலைப்பாதையில் போக்குவரத்து நெரிசல் குறையும் என்றனர்.

# திருப்பூர்: கார் வேன் நேருக்கு நேர் மோதி விபத்து 4 பேர் உயிரிழப்பு



திருப்பூர், அக்.10

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் அருகே கார் சுற்றுலா வேன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர்பரிதாபமாக உயிரிழந்தனர். முன்னதாக பழனியைச்சேர்ந்த ஒரு குடும்பத்தினர், கிணத்துக்கடவில் உள்ள உறவினரின் இல்ல துக்க நிகழ்ச்சிக்கு சென்றுவிட்டு காரில் திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது மடத்துக்குளம் அருகே நான்குவழிச் சாலையில் காரும், வேனும் நேருக்கு நேர் மோதி பயங்கர விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் காரில் பயணித்த சிறுவன் உட்பட 4 பேர்பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் இருவர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சுற்றுலா வேனில் 20க்கும் மேற்பட்டோர் பயணித்த நிலையில், 12 பேர் லேசான காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தவிபத்து தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அருந்ததியர் உள் ஒதுக்கீடு வழக்கு: சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்புக்கு சரத்குமார் வரவேற்பு

சென்னை, அக். 19

பா.ஜனதாவைச் சேர்ந்த நடிகர் சரத்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கடந்த 2009ம் ஆண்டு கருணாநிதி ஆட்சிக் காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான 18 சதவீத இடஒதுக்கீட்டில் அருந்ததியினருக்கு 3 சதவீத உள் இடஒதுக்கீடு வழங்குவதாக அறிவிக்கப்பட்டது. இதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்குகளை விசாரித்த 7 நீதிபதிகள் கொண்ட அமர்வு, உள் ஒதுக்கீடு வழங்குவதற்கு மாநில அரசுகளுக்கு உரிமை உண்டு என சரியான தீர்ப்பை வழங்கியது.

இந்த தீர்ப்புக்கு எதிராக மறு சீராய்வு மனு தாக்கல் செய்த திருமாவளவனின் வழக்கைதள்ளுபடி செய்த சுப்ரீம் கோர்ட்டு ஏற்கனவே பிறப்பித்த தீர்ப்பு சரியானது தான் என உறுதிபட கூறியிருப்பது வரவேற்கத்தக்கது.

மாநில உரிமைகள் குறித்து ஒருபுறம் போராடிக் கொண்டிருக்கும் கட்சியினர், மாநில உரிமைகளை நீதிமன்றமே நிலைநாட்டி தீர்ப்பு வழங்கிய சமயத்தில், இந்த தீர்ப்புக்கு எதிராக மறுசீராய்வு மனு தாக்கல் செய்தது வியப்பூட்டுகிறது.

உள் இட ஒதுக்கீடு, பட்டியல் சமூகத்தை பல குழுக்களாகப் பிரிக்கும் எனத் திருமாவளவன் தெரிவித்திருக்கிறார். பட்டியலின மக்களிடையே இருக்கும் சில பிரிவினைகளை களைந்து அவர்களை ஒன்றுபட செய்திருக்க வேண்டியது, தலைவர்களின் கடமை.

உண்மையாகவே தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்காக போராடும் தலைவராக இருந்தால், இந்த தீர்ப்பை ஆதரித்து, சமூக நீதியை நிலைநாட்டவும், சமத்துவம் தழைக்கவும் திருமாவளவன் பணி செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பராமரிப்பு பணி: ஆவடி பட்டாபிராம் இடையே மின்சார ரெயில் ரத்து



சென்னை, அக். 10

சென்னை சென்டிரல் அரக்கோணம் வழித்தடத்தில் உள்ள பட்டாபிராம் பணிமனையில் இன்று மற்றும் நாளை பராமரிப்பு பணி மேற்கொள்ள இருப்பதால் மின்சார ரெயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக தெற்கு ரெயில்வே தெரிவித்துள்ளது.

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

ஆவடியிலிருந்து 10, 11 ஆகிய தேதிகளில் காலை 3 மணிக்கு புறப்பட்டு பட்டாபிராம் செல்லும் மின்சார ரெயிலும், பட்டாபிராமில் இருந்து 9, 10 ஆகிய தேதிகளில் (இன்று மற்றும் நாளை) இரவு 9.50, 11.50 ஆகிய நேரங்களில் ஆவடி புறப்பட்டு செல்லும் மின்சாரரெயில்களும் ரத்து செய்யப்படுகிறது.

அதேபோல் சென்னை சென்டிரலில் இருந்து 9, 10 ஆகிய தேதிகளில் இரவு 8.30, 9.15, 10.40 ஆகிய நேரங்களில் புறப்பட்டு பட்டாபிராம் செல்லும் மின்சார ரெயில் ஆவடி பட்டாபிராம் இடையே பகுதி நேர ரத்து செய்யப்படுகிறது. மேலும், சென்னை சென்டிரல் இருந்து 10ந்தேதி காலை 4.15, 5.15 ஆகிய நேரங்களில் புறப்பட்டு பட்டாபிராம் செல்லும் மின்சார ரெயில் ஆவடிபட்டாபிராம் இடையே பகுதி நேர ரத்து செய்யப்படுகிறது.

பட்டாபிராமில் இருந்து 9,10 ஆகிய தேதிகளில் இரவு 10.45 மணிக்கு புறப்பட்டு மூர்மார்க்கெட் செல்லும் மின்சார ரெயிலும், 10ந்தேதி காலை 5.30, 6.35 ஆகிய நேரங்களில் புறப்பட்டு மூர்மார்க்கெட் செல்லும் மின்சார ரெயிலும், 10, 11 ஆகிய தேதிகளில் காலை 3.30 மணிக்கு புறப்பட்டு மூர்மார்க்கெட் செல்லும் மின்சார ரெயிலும் பட்டாபிராம் ஆவடி இடையே பகுதி நேர ரத்து செய்யப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருப்பூர் வெடிவிபத்தில் 3 பேர் உயிரிழந்த செய்தி அதிர்ச்சியளிக்கிறது: எடப்பாடி பழனிசாமி

சென்னை, அக். 10

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது: திருப்பூர் பாண்டியன் நகர் பகுதியில் ஏற்பட்ட நாட்டு வெடிகுண்டு விபத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது. குடியிருப்பு பகுதியில் பாதுகாப்பற்ற முறையில் நாட்டு வெடிகள் தயாரித்து வந்ததை திமுக அரசும், காவல்துறையும் அறிந்திருக்காமல் இருந்தது ஏன்..? திமுக ஆட்சியில் அனைத்து மட்டங்களிலும் நிர்வாகம் என்பது அறவும் செயல்பாட்டில் இல்லை என்பதையே தொடர்ச்சியான நிகழ்வுகள் உணர்த்தும் செய்தி. தொடர்ந்து மக்கள் பாதுகாப்பு குறித்த விஷயங்களில் திமுக அரசு அலட்சியத்துடன் செயல்படுவது கடும் கண்டனத்திற்குரியது. இந்த விபத்திற்கான காரணத்தை உரிய விசாரணை மூலம் கண்டறியுமாறும், இனி இதுபோன்ற விபத்துகள் நிகழாவண்ணம் குடியிருப்பு பகுதிகளுக்கான பாதுகாப்பை உறுதி செய்யுமாறு தி.மு.க. முதல்அமைச்சரை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# வைரலாகும் புஷ்பா 2 திரைப்படத்தின் புதிய போஸ்டர்




'புஷ்பா 2 தி ரூல்' படம் வருகிற டிசம்பர் 6ந் தேதி வெளியாக உள்ளநிலையில், புதியபோஸ்டரைபடக்குழுவெளியிட்டுள்ளது.

அல்லு அர்ஜுன் நடிப்பில் கடந்த 2021ம் ஆண்டு வெளியாகி மிகப்பெரிய அளவில் ஹிட் அடித்த படம் புஷ்பா தி ரைஸ் . இப்படத்தின் வெற்றியைத்தொடர்ந்து, தற்போது இதன் இரண்டாம் பாகமாக. 'புஷ்பா 2 தி ரூல்' படம் உருவாகி வருகிறது.

சமீபத்தில் 'புஷ்பா 2 தி ரூல்' படத்தின் டீசரும் அதனைத் தொடர்ந்து படத்தின் பாடல்களில் லிரிக் வீடியோவும் வெளியாகி வைரலாகின. இப்படம் கடந்த 15ம் தேதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் படப்பிடிப்பில் சிலதாமதங்கள் ஏற்பட்டதால் படத்தின் ரிலீஸ் தேதி தள்ளிப்போனது.

பின்னர், 'புஷ்பா 2 தி ரூல்' படம் வருகிற டிசம்பர் 6ந் தேதி வெளியாகும் என அதிகாரப்பூர்வ ரிலீஸ் தேதியை அறிவித்தனர். இதனையடுத்து, படக்குழு புதிய போஸ்டர் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், 'படத்தின் முதல்பாதி பணிகள் நிறைவுற்றது, படம் பாக்ஸ் ஆபிஸில் புயலைக் கிளப்பும்' என்று பதிவிட்டும் உள்ளனர். இதனையடுத்து இந்த போஸ்டர் தற்போது வைரலாகி வருகிறது.

# 'குட் பேட் அக்லி' படத்தின் படப்பிடிப்பு காட்சி இணையத்தில் கசிவு





ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் நடிகர் அஜித் குமார் தனது 63வது படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்துக்கு 'குட் பேட் அக்லி' என்று பெயரிடப்பட்டுள்ளது. இத்திரைப்படம் அடுத்த ஆண்டு பொங்கல்பண்டிகைக்குவெளியாகும்என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் மற்றும் செகன்ட் லுக் போஸ்ட வெளியாகி வைரலானது.

மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இந்த படத்துக்கு தேவிஸ்ரீ பிரசாத் இசையமைக்கிறார். சமீபத்தில் 'குட் பேட் அக்லி' திரைப்படத்தில் நடிகர் பிரசன்னா நடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. குட் பேட் அக்லி படத்தின் படப்பிடிப்பை ஐதராபாத்தில்கடந்தசிலமாதங்களாகநடைபெற்றுமுடிவடைந்தது.

தற்போது அடுத்தக்கட்ட படப்பிடிப்புகள் ஸ்பெயினில் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், குட் பேட் அக்லி படத்தின் படப்பிடிப்பு தளத்தில் அஜித்குமார் நடிக்கும் காட்சிகள் இணையத்தில் கசிந்துள்ளது. அதில் நடிகர் அஜித் காரில் இருந்து இறங்குவது போல நடிக்கிறார். வழக்கமான தோற்றத்தில் இல்லாமல், புதிய தோற்றத்தில் அதாவது 'டான்' போன்ற தோற்றத்தில் அஜித் காணப்பட்டார்.

# ஓ.டி.டி.யில் வெளியாகும் ஜி.வி.பிரகாஷ் நடித்துள்ள 'ரெபெல்' படம்




அறிமுக இயக்குனர் நிகேஷ் ஆர்.எஸ் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'ரெபெல்'. இந்த படத்தில் ஜி.வி. பிரகாஷ் கதாநாயகனாக நடித்துள்ளார். மேலும், மமிதா பைஜு, வெங்கடேஷ் வி.பி, ஷாலு ரகிம், கருணாஸ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

ஸ்டுடியோ கிரீன் சார்பில் கே.இ.ஞானவேல் ராஜா தயாரித்துள்ள இந்த படத்துக்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார். அருண் ராதாகிருஷ்ணன் ஒளிப்பதிவு செய்துள்ளார். கேரளாவில் நடைபெற்ற உண்மை சம்பவத்தை மையமாக கொண்டு தமிழுக்காக போராடும் ஒரு இளைஞனாக ஜி.வி. பிரகாஷ் நடித்து கடந்த மார்ச் 22ம் தேதி வெளியானது. 'பிரேமலு' படத்தில் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி புகழ் பெற்ற மமிதா பைஜு இப்படத்தில் நாயகியாக தமிழ் சினிமாவிற்கு அறிமுகமானார்.

இப்படம் கலவையான விமர்சனங்களை பெற்றது. இந்த நிலையில் தற்போது இந்த படத்தின் ஓ.டி.டி ரிலீஸ் குறித்த தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, இப்படம் வருகிற 11ந் தேதி சிம்பிலி சவுத் ஓ.டி.டி தளத்தில் வெளியாக உள்ளது.

# டெல்லி சென்ற இந்திய அணி... ஆட்டம் போட்ட சூர்யகுமார் யாதவ் வைரல் வீடியோ



வங்காளதேச கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 2 டெஸ்ட் கொண்ட தொடரை இந்தியா 20 என்ற கணக்கில் கைப்பற்றியது. சென்னையில் நடந்த முதல் டெஸ்டில் 280 ரன் வித்தியாசத்திலும், கான்பூரில் நடைபெற்ற 2வது டெஸ்டில் 7 விக்கெட் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றது.

இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட டி20 தொடர் நடைபெற்று வருகிறது. இதில் குவாலியரில் நடைபெற்ற முதல் போட்டியில் இந்திய அணி 7 விக்கெட் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றது. இதன் மூலம் 10 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.இந்நிலையில் இரு அணிகள் மோதும் 2வது 20 ஓவர் போட்டி டெல்லியில் நாளை ( 9ந் தேதி) நடக்கிறது.

இதற்காக இந்திய அணி டெல்லி சென்றது. அங்கு அவர்களுக்கு மேளதாளத்துடன் வரவேற்பு நடைப்பெற்றது. இதை பார்த்த சூர்யகுமார் குத்தாட்டம் போட்டார். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ரோகித் ஓய்வு பெறப்போவது எப்போது..? சிறுவயது பயிற்சியாளர் கருத்து




சமீபத்தில் நடந்து முடிந்த டி20 உலகக்கோப்பை தொடரில் ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி கோப்பையை வென்று அசத்தியது. இந்த தொடருடன் சர்வதேச டி20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக ரோகித் சர்மா, விராட் கோலி, ரவீந்திர ஜடேஜா ஆகியோர் அறிவித்தனர். அதேசமயம் டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட்டில் தொடர்ந்து விளையாடுவதாகவும் அறிவித்தனர்.

அதனை தொடர்ந்து தற்போது ரோகித் சர்மா ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் கேப்டனாக தொடர்ந்து விளையாடி வருகிறார். இந்திய அணிக்காக தோனிக்கு பிறகு ஐ.சி.சி கோப்பையை பெற்று தந்த ரோகித் இன்னும் சில கோப்பைகளை பெற்று தர வேண்டும் என்று தனது விருப்பத்தை தெரிவித்து இருந்தார்.

இந்நிலையில் 37 வயதாகும் ரோகித் சர்மா எப்போது சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவார்...? என்பது குறித்து ரோகித் சர்மாவின் சிறுவயது பயிற்சியாளரான தினேஷ் லாட் சில கருத்துக்களை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, ரோகித் சர்மாவுக்கு தற்போது 37 வயதாகிறது. உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டி அடுத்த ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்று முடிந்தவுடன் ரோகித் சர்மா டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவிப்பார் என்று நான் நினைக்கிறேன்.

ஏனெனில் தற்போது அவருக்கு வயது அதிகரித்துக் கொண்டே போகிறது. இதன் காரணமாக அவர் டெஸ்ட் போட்டியில் இருந்து நிச்சயமாக அடுத்த ஆண்டு ஜூன் மாதம் ஓய்வுபெற அதிக வாய்ப்புள்ளது. ஆனாலும் ஒருநாள் கிரிக்கெட்டில் ரோகித்சர்மாதொடர்ந்துவிளையாடுவார். 2027ம்ஆண்டுநடைபெறஉள்ள50ஓவர்உலககோப்பையில்விளையாடிவிட்டு இந்திய அணிக்காக அந்த கோப்பையை கைப்பற்றி கொடுத்த பிறகு அவர் ஒருநாள் போட்டியிலிருந்து ஓய்வை அறிவிப்பார். ஆனால் தற்சமயம் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தொடரின் இறுதிப்போட்டியின் முடிவோடு அவர் டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவார் என்று நான் நினைக்கிறேன் என தினேஷ் லாட் கூறியுள்ளார்.

# ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ்; டெய்லர் பிரிட்ஸ், சிட்சிபாஸ் 4வது சுற்றுக்கு முன்னேற்றம்




ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடர் சீனாவில் நடந்து வருகிறது. இந்த தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெற்ற 3வது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான டெய்லர் பிரிட்ஸ் (அமெரிக்கா), ஜப்பானின் யோசுகே வாடனுகி உடன் மோதினார்.

இந்த ஆரம்பம் முதலே அபாரமாக ஆடிய டெய்லர் பிரிட்ஸ் 63, 64 என்ற நேர் செட் கணக்கில் யோசுகே வாடனுகியை வீழ்த்தி 4வது சுற்றுக்கு முன்னேறினார்.

இதே பிரிவில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ் (கிரீக்), பிரான்சின் அலெக்ஸாண்ட்ரே முல்லர் உடன் மோதினார்.

இந்த போட்டியில் அபாரமாக செயல்பட்ட சிட்சிபாஸ் 63, 75 என்ற செட் கணக்கில் அலெக்ஸாண்ட்ரே முல்லரை வீழ்த்தி 4வது சுற்றுக்கு முன்னேறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.